முருகப்பெருமான் துணை

**மகான் பூனைக்கண்ணார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானத்தலைவனே மனம் கனிந்து
ஞானயுகம் படைக்க வேண்டி
ஞான தேசிகனின் அவதாரத்தை
ஞானியாக படைத்து இருக்க
2. இருக்கவே அரங்கமகான் பெருமை
இவ்வுலகில் அறிந்தாலே போதும்
வருத்தமில்லா ஞான பூமியாக
வையகம் வல்லமை பெறுமெனக் கூறி
3. கூறியே அனுகூல ஆசிதனை
குறைவிலா சுபகிருது சிலைதிங்கள்
தெரிவிப்பேன் மூவையீர் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 17 ம் நாள் 01.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
தேசிகனுக்கு பூனைக்கண்ணார் யானும்
4. யானுரைக்க அரங்கன் அவதாரம்
ஞானிகளை உலகமெலாம் பரப்பி
ஞானயுகம் படைக்கும் வண்ணம்
ஞானசபை நடத்தி வர
5. வருகவே கலியுக மக்களும்
வணங்கி பிரணவக் குடிலனுகிவர
குருவருளாக அரங்கன் சக்தி
குவலயமெங்கும் பரவி இனிதே
6. இனிதே மக்களை மாற்றி
எல்லா வளமும் அடையச்செய்து
கனிவேலவன் துணைபட வாழும்
கண்ணியமான வாழ்வாகத் தேறும்
7. தேறவே தெளிந்த சிந்தையும்
திடமானச் செயலும் வடிவுமாகி
அறத்தின் வழி செல்லும் ஆற்றல்
ஆக்கமாகி உலகில் அற்புதம் காணும்
8. காணவே மனித சக்திகளெல்லாம்
கருணைமிக்க ஞான சக்திகளாக
ஞான தேசிகனால் படைக்கப்பட்டு
ஞானயுகமாக சடுதி மாற்றம்
9. மாற்றம் தொண்டர்கள் மூலம்
மண்ணுலகம் கண்டு உயரும்
ஆற்றல்பட காலம் கடத்திடா
அகிலத்தார் வந்து சேர்ந்து

10. சேர்ந்துமே அரங்கன் தருமத்தில்
சேவையுடன் பொருளுதவி செய்து
நேர்ந்துமே சன்மார்க்க விதிகளை
நேருமைபட ஏற்றுத் தொடர

11. தொடரவே ஞானத்தலைமையை
தேர்ந்தெடுக்கும் சக்தி கூடி
இடரில்லா ஞான ஆட்சியாக
இவ்வுலகம் கண்டு சிறக்கும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–